## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020.
Prosecution witness for P.W.23.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மகாராஜன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கயத்தார் வட்டம், சிதம்பரம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திற்கு ஒரு பிரச்சனை காரணமாக நான் சென்றிருந்தபோது போலீசார் என்னிடம் சில வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 11 மற்றும் 12**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 17.04.2019 அன்று காலை 8.45 மணியளவில் நானும், ஒரு மகேந்திரன் என்பவரும் முடுக்குமீண்டான்பட்டியில் நின்று கொண்டிருந்தபோது போலீசார் 2ம் எதிரியை கைது செய்து

விசாரித்தபோது 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், அதன் அடிப்படையில் 2ம் எதிரி தன்னிடமிருந்து அதே இடத்தில் ஆஜர் செய்த கைபேசியை போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும், நாங்கள் உடனிருந்து அந்த மகஜரில் கையொப்பமிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.03.17 19:12:34 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020.
Prosecution witness for P.W.24.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மகேந்திரன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது கல்லூரணியில் குடியிருந்து லாரி ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திற்கு ஒரு பிரச்சனை காரணமாக நான் சென்றிருந்தபோது போலீசார் என்னிடம் சில வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 13 மற்றும் 14**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 17.04.2019 அன்று காலை 8.45 மணியளவில் நானும், அ.சா.23ம் முடுக்குமீண்டான்பட்டியில் நின்று கொண்டிருந்தபோது போலீசார் 2ம் எதிரியை கைது செய்து விசாரித்தபோது 2ம் எதிரி தானாக

முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், அதன் அடிப்படையில் 2ம் எதிரி தன்னிடமிருந்து அதே இடத்தில் ஆஜர் செய்த கைபேசியை போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும், நாங்கள் உடனிருந்து அந்த மகஜரில் கையொப்பமிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.03.17 19:12:41 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020.
Prosecution witness for P.W.25.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கதிரவன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 29.04.2019 அன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 1–ன் கடிதத்தின்படி நாலாட்டின்புதூர் காவல்நிலைய குற்ற எண் 62/2019 வழக்கில் இறந்துபோன அடையாளம் தெரியாத நபரின் பிரேதத்திலிருந்து பெறப்பட்ட தொடை எலும்பின் ஒரு பகுதியை மூடி முத்திரையிடப்பட்ட பிளாஸ்டிக் வாளி ஒன்றில் பெற்று பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி எலும்பு பகுதியிலிருந்து மரபணு பிரித்தெடுக்கப்பட்டு பிசிஆர் ஆம்பிளிபைடு எஸ்டிஆர் செய்முறை மூலம் 15 எஸ்டிஆர் குறிப்பிடங்கள் மற்றும் அமிலோ ஜெனின் பாலின குறிப்பிடத்திலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு ஒரு ஆண் மரபணு புரோபைல் பெறப்பட்டது. எலும்பு பகுதியிலிருந்து பெறப்பட்ட மரபணு புரோபைலை ஒப்பீடு செய்வதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட தந்தை திரு.ராமர் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்டார் தாயார் திருமதி. முப்பிடாதி ஆகியோரின் ரத்த மாதிரிகள் சேகரம் செய்ய தகவல் தெரிவிக்கப்பட்டது. கடந்த

30.07.2019 அன்று இரண்டு எப்டிஏ கார்டுகள் மூடி முத்திரையுடன் கூடிய உறையில் தலைமை காவலரான அ.சா.21 மூலம் எங்கள் அலுவலகத்திலிருந்து கொடுத்தனுப்பப்பட்டது. கடந்த 26.08.2019 அன்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 1–ன் அவர்களின் கடிதத்தின்படி இரண்டு நபர்களின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரண்டு எப்டிஐ கார்டுகள் மூடி முத்திரையுடன் கூடிய உறையில் தலைமை காவலரான அ.சா.21ன் மூலம் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி ரத்த மாதிரிகளை பிசிஆர் ஆம்பிளிபைடு எஸ்டிஆர் செய்முறை மூலம் பகுப்பாய்விற்கு உட்படுத்தி அ.சா.1 மற்றும் முப்பிடாதி ஆகியோரின் மரபணு புரோபைல்கள் பெறப்பட்டது. அ.சா.1 மற்றும் முப்பிடாதி ஆகியோரின் மரபண புரோபைல்கள் இறந்துபோன நபரின் தொடை எலும்பு பகுதியிலிலுருந்து பெறப்பட்ட ஆண் மரபணு புரோபைலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. அதில் இறந்த அடையாளம் தெரியாத நபரான ராமநாதன் தொடை எலும்பு பகுதியிலிருந்து பெறப்பட்ட மரபணு புரோபைலுடன் மேற்படி இரண்டு புரோபைல்கள் ஒப்பீடு செய்யப்பட்டதில் இறந்துபோனவரின் மரபணு மேற்படி இரண்டு மரபணுக்களுடன் ஒத்துப்போவது ஆய்வில் தெரிய வந்தது. அதனால் இறந்துபோன நபர் அ.சா.1 மற்றும் முப்பிடாதி ஆகியோரின் உயிரியல் மகன் என்று உறுதி செய்யப்பட்டு அறிக்கையாக எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. மேற்படி எலும்பு பகுதிக்கான அறிக்கை **அ.சா.ஆ15**. அதன் எண் 40/2019. மேற்படி எலும்பு பகுதி மற்றும் பெற்றோர்களின் ரத்த மாதிரி ஆகியவற்றை ஒப்பீட்டு கொடுக்கப்பட்ட அறிக்கை **அ.சா.ஆ16**. அதன் எண் 100/2019. மேற்படி அ.சா.1னின் மரபணு புரோபைல் **அ.சா.ஆ17**. மேற்படி எலும்புப் பகுதியின் மரபணு புரோபைல் **அ.சா.ஆ18**. மேற்படி முப்பிடாதியின் மரபணு புரோபைல் **அ.சா.ஆ19**. மேற்படி மூன்று

புரோபைல்களையும் ஒப்பீடு செய்து கிடைத்த முடிவு **அ.சா.ஆ 20**. மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் **அ.சா.ஆ 21**. நீதிமன்றத்திலிருந்து மேற்படி ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் **அ.சா.ஆ 22**. மதுரை ஆய்வகத்திலிருந்து நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் **அ.சா.ஆ 23**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி எலும்பு பகுதி மேற்படி இறந்துபோன இராமநாதன் உடலிலிருந்து எடுக்கப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த எலும்பு பகுதி காவலர் மூலமாகத்தான் எங்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. மருத்துவமனையிலிருந்து எங்களுக்கு எலும்பு பகுதி அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து எங்களுக்கு கடிதம் வந்தது. மேற்படி கடிதத்தை நான் மேற்படி அறிக்கைகளுடன் இணைக்கவில்லை. அப்படி கடிதம் வரவில்லை என்பதால்தான் மேற்படி அறிக்கைகளுடன் இணைக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் மேற்படி எலும்பு குறித்து விவரித்துள்ளதை அ.சா.ஆ 15 ல் நான் குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ 15 ல் காவல்நிலையத்திலிருந்து வந்த பரிந்துரை மற்றும் அ.சா.ஆ 16 பற்றித்தான் விவரித்துள்ளேன் என்றும், மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்ட எந்த தகவலையும் நான் விவரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 மற்றும் முப்பிடாதி ஆகியோரின் ரத்த மாதிரிகளை நான் நேரடியாக சேகரிக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் ஆய்வின்படி ஒரு சதவீதம் வேறு விதமாக முடிவை தெரிவிக்கலாம் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.17 19:12:52 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020.
Prosecution witness for P.W.26.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. முத்துலெட்சுமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2019 அன்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இளநிலை அறிவியல் அலுவலராக நான் பணியில் இருந்தபோது கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1–ன் வேண்டுகோள் கடிதத்துடன் நாலாட்டின்புதூர் காவல்நிலைய குற்ற எண் 62/2019 வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களை தலைமை காவலரான அ.சா.21ன் மூலம் மூடி முத்திரையிடப்பட்ட அட்டை பெட்டி ஒன்றை ஆய்வகத்தில் பெறப்பட்டது. அதில் கீழ்க்கண்ட வழக்கு சொத்துக்கள் இருந்தன. 1. ரத்தம்பட்ட மண், 2. ரத்தம்படாத மண், 3. சுமார் 1.3 கிலோ எடையுள்ள ஒழுங்கற்ற கல், 4. எம்ஜிஎம் டைம,ண்ட் XXX என்று லேபில் ஒட்டப்பட்ட 180 மிலி கொள்ளளவுள்ள பாட்டில், 5. கிழிந்தநிலையில் ஊதாநிற முழுக்கை சட்டை அதன் மேல் பிசுபிசுப்பான துர்நாற்றத்துடன் கூடிய கறையுடன் இருந்தது. 6. கிழிந்த நிலையில் பனியன் அதன் மேல் பிசுபிசுப்பான துர்நாற்றத்துடன் கூடிய கறைகள் இருந்தது. 7. கிழிந்த நிலையில் நீலநிற ஜட்டி அதன் மேல் பிசுபிசுப்பான துர்நாற்றத்துடன் கூடிய

கறைகள் காணப்பட்டது, 8. கிழிந்த நிலையில் நீலநிற ஜீன்ஸ் பேண்ட் அதன் மேல் பிசுபிசுப்பான துர்நாற்றத்துடன் கூடிய பழுப்புநிற கறைகள் இருந்தது. மேற்படி வழக்கு சொத்துக்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் 1 மற்றும் 8 மட்டும் ரத்தம் காணப்பட்டது என்றும், 2 முதல் 7 அயிட்ட சொத்துக்களில் ரத்தம் காணப்படவில்லை என்றும் அறிக்கை வழங்கியிருக்கிறோம். அந்த அறிக்கை **அ.சா.ஆ 24**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 24ல் மேற்படி ரத்தம் என்ன வகையான ரத்தம் என்பதை குறிப்பிடவில்லை. 1 மற்றும் 8 அயிட்ட சொத்துக்களில் ரத்தம் காய்ந்த நிலையில் இருந்தது என்றால் சரிதான்.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.17 19:13:00 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.